தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் தினம் வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் மீளாய்வாண்டினது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடங்கியுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව  இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.  No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34  +94 11 2 88 72 23  ag@auditorgeneral.gov.lk  www.auditorgeneral.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நியதிச்சட்ட சபைகளது வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த 60 தினங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் தினம் வரை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருக்கும்தன்மை

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையினால் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை, வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வகை | பெறுமதி |
|---|---|
| | ரூபா. |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 5,528,972 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 100,926,209 |
| மொத்தச் சொத்துக்கள் | **106,455,181** |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 43,102,015 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 5,795,491 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 48,897,506 |
| தேறிய சொத்துக்கள் / பொறுப்புக்கள் | 5,755,767 |
| | **106,455,181** |
| மொத்த வருமானம் | 165,246,657 |
| மொத்த செலவினம் | 104,698,944 |

2

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | |
|---|---|
| வரிக்கு முன் மிகை | 60,547,713 |
| வருமான வரி | 2,990,038 |
| | ---------------- |
| வரிக்குப் பின் மிகை | **57,557,675** |
| | ======= |

**2.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

மீளாய்வாண்டின் போது எல்லைக்கோட்டு உற்பத்திகளின் பதிவுக்குப் பெறப்பட்ட மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களில், அவற்றை போதுமான காலப்பகுதியொன்றுக்கு பரீட்சிப்பதற்கு பெற்ற திகதி, பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவுசெய்த திகதி போன்றவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால், மருந்துகளின் பதிவு, மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திகளின் செயலாற்றல் மீது அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்த முடியாதுள்ளது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 105 ஆம் பிரிவு | எல்லைக்கோட்டு உற்பத்திகள் மற்றும் நிபந்தனைகளுக்கான பதிவு மீதான அதிகாரம் நிரந்தரமான அல்லது தற்காலிகமான பதிவாக அளிக்க முடியுமாகயிருந்த போதிலும், அவ்வாறான நிபந்தனைகள் கணக்காய்வு திகதியான 2018 ஆகஸ்ட் 23 வரையிலும் விதிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2005 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டம் | ஏதேனும் வரிக்காலப்பகுதிக்கு பிரயோகிக்கப்படக்கூடிய வரியொன்று, வரிக் காலப்பகுதியின் முடிவுத்திகதியிலிருந்து பின்தொடர் மாதத்தின் 20 ஆவது தினத்தை |

3

பிந்தாத திகதியொன்றில் உள்நாட்டு இறைவரிப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். இருப்பினும், அதிகாரசபை 2017 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய பெறுமதிசேர் வரியினை 2018 செப்தெம்பர் 21 வரையிலும் செலுத்தியிருக்கவில்லை.

(இ) 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

ஒவ்வொரு ஆண்டின் ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்ததிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் முத்திரைத் தீர்வையினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமாகயிருந்த போதிலும், அதிகாரசபை 2017 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய முத்திரைத் தீர்வையினை 2018 செப்தெம்பர் 21 வரையிலும் அனுப்பியிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

---

(i) நிதிப்பிரமாணம் 395(இ)

வங்கிக் கணக்குகளின் ஒவ்வொரு மாதக் கொடுக்கல் வாங்கல்களினதும் நிலைமை தொடர்பாக அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 செப்தெம்பர் மாதத்துடன் தொடர்புடைய வங்கி கணக்கிணக்கக்கூற்று, 2018 ஆகஸ்ட் 23 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, வங்கி கணக்கிணக்கக் கூற்றின் தயாரிப்புக்கு 11 மாதங்கள் காலப்பகுதியொன்றுக்கான தாமதமொன்று அவதானிக்க முடிந்தது.

(ii) நிதிப்பிரமாணங்கள் 454

மீளாய்வாண்டின் போது இரண்டு வாகனங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட 08

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | | |
|---|---|---|
| | | டயர்களுக்கு பொருள் பெறுகைக் குறிப்பு விநியயோகிக்கப்பட்டிருக்காததுடன் அது இருப்பில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டுடன் தொடர்புடைய களஞ்சியங்கள் தொடர்பான அளவைச் சபையின் அறிக்கைகள் 2018 செப்தெம்பர் 21 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சேவை நிலையமொன்றின் ஊழியர்களின் எண்ணிக்கையினை கருத்திற்கொள்ளாது கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படவேண்டிய போதிலும், 2014 மே 31 இன் பின்னர் செயற்பாடற்றுக் காணப்படும் கைவிரல் அடையாள இயந்திரத்தினை திருத்தஞ்செய்வதற்கு 2018 செப்தெம்பர் 21 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 செயற்பாடும் மீளாய்வும்

மீளாய்வாண்டிற்கு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், செய்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்காமையினால், அதிகாரசபையின் செயல்முன்னேற்றத்தினை முறையாக மீளாய்வுசெய்ய முடியாதிருந்தது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

3.2 **முகாமைத்துவச் செயற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் அவதியுறும் ஏதேனும் நபர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டினை கருத்திற்கொள்ளும் பொருட்டு 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 07 ஆம் பந்தியின் 123 ஆம் பிரிவின் பிரகாரம், ஸ்தாபிக்கப்படவேண்டிய மேன்முறையீட்டு குழு 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி வரையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 38(2)(அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம், சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடம் 2015 யூலை 01 முதல் அமுலுக்குவரும் வகையில் அதிகாரசபையால் கையேற்கப்படல் வேண்டும். இருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி வரையிலும் அந்த ஆய்வுகூடம் அதிகாரசபையினால் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதங்களினை (Waiver of registration) விநியோகிப்பது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் III ஆம் அத்தியாயத்தின் IV ஆம் பகுதியின் 58 ஆம் இலக்க மற்றும் IV ஆம் அத்தியாயத்தின் IV ஆம் பகுதியின் 82 ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு நபரும் மருந்துகள் அல்லது மருத்துவ உபகரணங்கள் எதனையும் அதிகாரசபையின் பதிவில்லாமலும் அதிகாரசபையினது அனுமதிப்பத்திரத்தைப் பெறாது உற்பத்தி செய்தல் அல்லது இறக்குமதி செய்தல் ஆகாது. அந்த அதிகாரச்சட்டத்தின் 59 ஆம் மற்றும் 83 ஆம் பிரிவுகளின் பிரகாரம், பிரத்தியேகமான பாதுகாப்புடன் பிழையற்ற நிலைமையிலான மருந்துகள் அல்லது மருத்துவ உபகரணங்கள்

6

வழங்கப்படுவதை சான்றுறுதிப்படுத்துவதற்குத் தேவையுள்ளதாக கருதப்படும் மருந்துகள் அல்லது மருத்துவ உபகரணங்களை மதிப்பாய்வு செய்ததன் பின்னர் பதிவுச் சான்றிதழையும் அனுமதிப் பத்திரத்தையும் வழங்குவது அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட வேண்டும். இருப்பினும், மேற்படி ஏற்பாடுகளுக்கு முரணாக, அரச மருந்துகள் கூட்டுத்தாபனம், மருத்துவ வழங்கற் பிரிவு, ஏனைய அரச அல்லது தனியார் நிறுவனங்களுக்கு 2017 ஆம் ஆண்டின் போது பதிவிலிருந்து விடுவிக்கும் 655 கடிதங்களும் அதேவேளை 2018 சனவரி தொடக்கம் யூலை 10 வரை மற்றுமொரு அவ்வாறான 256 கடிதங்களும் விநியோகிக்கப்பட்டிருந்தன. அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிராத, மற்றும் அதிகாரமற்ற மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களினை இறக்குமதியாளர்கள் இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்கு அந்த பதிவிலிருந்து விடுவிப்பதனைக் குறிக்கும் கடிதம் அக்கடிதங்களினை பயன்படுத்தியிருந்தனர்.

(ii) பதிவிலிருந்து விடுவிப்பதனைக் குறிக்கும் கடிதங்களை வழங்குவதன் காரணமாக தகுதியை உறுதி செய்திராத மருத்துவ வழங்கற் பொருட்கள் நாட்டில் பெருமளவில் வந்து சேர்வதைத் தடுக்க முடியாதுள்ளது. மேலும், அந்தக் கடிதங்கள் 2017 சனவரியிலிருந்து 2017 யூன் 14 வரை கட்டணமின்றி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அதன் விளைவாக அந்தக் காலப்பகுதியின் போது அதிகாரசபையின் பதிவு மற்றும் அனுமதிக் கட்டண வருமானம் குறைவடைந்து காணப்பட்டது. அவ்வாறான கடிதத்தினை வழங்குகையில் ஐ.அ.டொலர் 100 கட்டணமொன்று அறவிடப்பட வேண்டுமென அமுலுக்குவரும் வகையில் 2017 யூன் 14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியினால் நிபந்தனையொன்று விதிக்கப்பட்டிருந்த போதிலும், அறவிடப்பட்ட கட்டணங்கள் தொடர்பான தகவல், கணக்காய்வுத் திகதியான, 2018 செப்தெம்பர் 21 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் VI ஆம் அத்தியாயத்தினது I ஆம் பகுதியின் 109 ஆம் பிரிவின் பிரகாரம்,

ஜாதிக விகணன கார்யாலய
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

ஒருவரது உயிரைப் பாதுகாப்பதற்கு அல்லது பரவும் நோய் அல்லது தொற்று நோய் என்பன பரவுவதைத் தடுப்பதற்கான விசேட சந்தர்ப்பங்களின் போது அல்லது வேறு ஏதாவது தேசியத் தேவைக்காகவோ அல்லது தேசிய பாதுகாப்பிற்காகவோ மருந்துகள், மருத்துவப் பொருட்கள் அல்லது எல்லைக்குட்பட்ட உற்பத்திப் பொருட்களைக் குறிப்பிட்டளவு இறக்குமதி செய்வதற்கும் அவற்றை வழங்குவதற்கும் அதிகாரசபையால் அதிகாரமளிக்கப்படலாம். எனினும், மேற்குறிப்பிட்ட விசேட தேவைகளைச் சாராத, தொடர்புடைய மருந்துகளினது அல்லது மருத்துவ உபகரணங்களது பதிவு காலாவதியாகுதல், பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் இல்லாதிருத்தல், பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களால் கூறு விலை சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களின் நிமித்தம் மீளாய்வாண்டின் போது 163 பதிவுசெய்தலை பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதங்கள் மருந்து வழங்கற் பிரிவுக்கும் அரசாங்க மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கும் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறான காரணங்களின் அடிப்படையில் பதிவுசெய்தலை பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதங்களை வழங்குதல் மூலம் வழங்குநர்களது மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், எல்லைக்குட்பட்ட உற்பத்திப் பொருட்களது பதிவைப் பெறுவதில் உள்ள ஆர்வம் என்பன பின்வாங்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(iv) மீளாய்வாண்டின் போது 06 சந்தர்ப்பங்களில் 03 மருந்து வகைகளுக்கு மீண்டும் மீண்டும் பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதங்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2018 யூலை 10 வரையான காலப்பகுதியின் போது அவ்வாறான 06 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(v) ரூபா 483,371 கிரயமுடைய Efavirenz tablets 600 mg மருந்துகளின் 25,200 அலகுகள் மற்றும் ரூபா 249,831 கிரயமுடைய அவ்வாறான மருந்துகளின் 12,600 அலகுகளின் கொள்வனவுக்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் ஒப்பந்தம் அளிக்கப்பட்ட ஒப்பந்தகாரர் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டிருக்காமையினால், அதிகாரசபை 2017 சனவரி 09 மற்றும் 2017 செப்தெம்பர் 18 இல் 02 பதிவிலிருந்து விடுவிப்பதனைக் குறிக்கும் கடிதங்களினை விநியோகித்திருந்தது.

இருப்பினும், 2016 செப்தெம்பர் 24 இலிருந்து 05 ஆண்டுகள் காலப்பகுதியொன்றுக்கு மேற்குறித்த மருந்துகளுக்கு பதிவினைப் பெற்றிருந்த விநியோகிஸ்தராக இருந்தபோதிலும், இந்த உற்பத்திக்கு எவ்வித பதிவுசெய்யப்பட்ட மூலங்களும் காணப்படவில்லை (There are no registered Sources for this Product) என்ற காரணத்தைச் சுட்டிகாட்டி 02 பதிவிலிருந்து விடுவிப்பதனைக் குறிக்கும் கடிதங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

### 3.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருந்துகளுக்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பதிவுச் சான்றிதழினை விநியோகித்தல் தொடர்பில் நடாத்தப்பட்ட பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் பிரகாரம், உற்பத்தி செய்வதற்கு அல்லது இறக்குமதி செய்வதற்கு விரும்புகின்ற ஏதேனும் நபர்கள் அவ்வாறான மருந்தின் பதிவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்துடன் மருந்துகளின் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அதேவேளை, மீளாய்வாண்டின் போது புதிய மருந்துகளின் பதிவுக்கு பெறப்பட்ட 599 விண்ணப்பங்களின் 62 விண்ணப்பங்கள் தொடர்பில் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், மேற்குறித்த 62 விண்ணப்பங்களில் 35 இற்கு பதிவுச் சான்றிதழ் மாதிரிச் சோதனைகளினை நடாத்தியிராது விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும், மிகுதியாகவுள்ள 27 விண்ணப்பங்களுக்கான பதிவுச்சான்றிதழினை விநியோகித்தல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பரீட்சிப்புக்கு உட்படுத்தப்படும் மாதிரிகள் தொடர்பில் ஆய்வுகூட பிரிவின் தரவுக் கோவையில் கோர்ப்பு இலக்கம் (Dossier Number) உள்ளடக்கப்பட்டிராததிலிருந்து, மாதிரிப் பரீட்சிப்புக்களின் செயல்முன்னேற்றம் மீது முறையானதொரு பகுப்பாய்வை மேற்கொள்ள முடியாதிருந்தது. பரீட்சிப்புக்கு 537 மாதிரிகள் பெறப்பட்டிருந்தமையினால்

மீளாய்வாண்டின் போது ஆய்வுகூடத்தினால் 85 மாதிரிகள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன், மாதிரிப் பரீட்சிப்புக்களின் செயல்முன்னேற்றம் 16 சதவீதம் என மாத்திரம் குறிப்பிடப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 59(4)(ஆ) பிரிவின் பிரகாரம், மருந்துகளின் மாதிரிகள் மற்றும் அனைத்து விபரங்களுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள், விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் பின்னர் மருந்துகளின் தரப் பரீட்சிப்புக்கு தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடத்திற்கு (என்எம்கியூஏஎல்) கிடைக்கக்கூடியதாக அதிகாரசபை மேற்கொள்ளும். இருப்பினும், அந்த ஆய்வுகூடத்தினால் மாதிரிப் பரீட்சிப்புக்களினை நடாத்தியதன் பின்னர் பெறுபேறுகளை விநியோகிப்பதற்கு முன்னர் மருந்துகளுக்கு தற்காலிக பதிவொன்று விநியோகிக்கப்பட்டிருந்த 14 சந்தர்ப்பங்கள் அங்கு அவதானிக்கப்பட்டன.

(iv) 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 60(1)(ஆ) பிரிவின் பிரகாரம், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மருந்துகள் மதிப்பீட்டு குழு (எம்ஈசீ) மற்றும் தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடத்தினால் (என்எம்கியூஏஎல்) மற்றும் அவ்வாறான மருந்துகளின் அனைத்து ஏனைய தொடர்புடைய காரணிகள், பதிவுகளினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளினை அதிகாரசபை கருத்தில் எடுத்துக்கொள்ளும். இருப்பினும், சமமான மருந்துகளின் பதிவுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் பதிவுச்சான்றிதழை விநியோகிப்பதற்கு ஒட்டுமொத்தமாக வித்தியாசமான காலப்பகுதிகள் எடுக்கப்பட்டிருந்தமை 47 விண்ணப்பங்களின் பரீட்சிப்பில் ஸ்தாபிக்கப்பட்டுக் காணப்பட்டது.

(ஆ) 2017 சனவரி 01 இலிருந்து 2018 யூலை 31 வரையான காலப்பகுதியின் போது கொழும்பு, திம்ரிகஸ்யாய, நுகேகொட, இரத்மலானை மற்றும் தெஹிவளை - கல்கிஸ்ஸ ஆகிய 05 பிரதேச செயலகங்களின் அதிகார பிரதேசத்திற்குள் வியாபாரப் பெயரினைப் பதிவு செய்தல் மற்றும் மருந்தக அனுமதிப்பத்திரங்களினை விநியோகித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(i) வியாபார பெயர்கள் பதிவுக்கான பதிவேட்டின் பிரகாரம், மேற்குறித்த காலப்பகுதியின் போது மேற்குறித்த 05 பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டிருந்த மருந்தகங்கள் 21 ஆகக் காணப்பட்டபோதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிடமிருந்து மேற்குறித்த 17 மருந்தகங்களுக்கு மருந்தக அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்காமை கணக்காய்விற்கு அதிகாரசபையினால் சமரப்பிக்கப்பட்ட தரவு கோவையின் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. மேலும், மருந்தக அனுமதிப்பத்திரங்களினை விநியோகிக்கையில், விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதிலிருந்து அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது வரை அனைத்து தகவல்களினையும் உள்ளடக்குவதற்கு முறைசார் தரவு கோவையொன்றை அதிகாரசபை பேணியிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் 119(7) ஆம் பிரிவின் பிரகாரம், அனுமதிப்பத்திரமொன்று தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் மருந்தகமொன்றாக பதிவுசெய்வதற்கு திருப்திபடவேண்டிய நிபந்தனைகள், பிரமாணங்களின் சூத்திரங்கள் மற்றும் விபரங்கள் அமைச்சரினால் 2018 செப்தெம்பர் 21 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) கொழும்பு மாவட்டத்திலுள்ள 49 மருந்தகங்கள் தொடர்பில் கோவைகளினை பரீட்சிக்கையில், 2017 ஆம் ஆண்டுடன் தொடர்பான அனுமதிப்பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காத 40 மருந்தகங்கள் அங்கு அவதானிக்கப்பட்டதுடன் மேற்குறித்த விடயத்திற்கு பின்னாலுள்ள காரணங்களினை ஆரம்பிப்பதற்கு மற்றும் அவ்வாறான வியாபாரங்கள் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாது நடாத்தப்படுமாக இருந்தால் வியாபார செயற்பாடுகளின் பேணுகையினை மேலும் தடுக்க முறைமையொன்றினை அதிகாரசபை ஸ்தாபித்திருக்கவில்லை.

(iv) 2017 திசெம்பரிலிருந்து கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியின் போது அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல் தொடர்பான பதிவேடுகளின் பரீட்சிப்பில், தொடர் இலக்கங்களின் பிரகாரம் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிராமை

11

மற்றும் விண்ணப்பதாரரினால் அதிகாரசபைக்கு தொடர்புடைய செலுத்துகை பற்றுச்சீட்டினை கையளிப்பதிலிருந்து அனுமதிப்பத்திரங்களினை விநியோகிப்பது வரை செயற்பாட்டில் பலவீனங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**3.4 ஆளணி நிர்வாகம்**

--------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 232 எனக் குறிப்பிடப்பட்ட அதேவேளை உள்ளபடியான பதவியணியினர் 122 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, வெற்றிடங்களின் எண்ணிக்கை 111 ஆகக் காணப்பட்டதுடன் மிகை 01 ஆகக் காணப்பட்டது. சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் 90 உத்தியோகத்தர்கள் அதிகாரசபையில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் மேற்குறித்த உத்தியோகத்தர்களில் 34 உத்தியோகத்தர்களின் வேலைவாய்ப்பிற்கு 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்புடைய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்ட நிறைவேற்றுதரமில்லாத பதவியொன்றுக்கு 03 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச்செய்யப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிராத சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். 2018 செப்தெம்பர் 21 அளவில் அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 03 வருடங்கள் காலப்பகுதியொன்று கடந்திருந்த போதிலும், நிரந்தர அடிப்படையில் பதிவிகளினை நிரப்புவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையில் சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் 06 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 02 ஆய்வுகூட உதவியாளர்கள் உள்ளடங்களாக 08 உத்தியோகத்தர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தமையினால், அதிகாரசபையில் வேலைக்கமர்த்தப்பட்ட காலப்பகுதியினை முடிவுக்குகொண்டுவருவதன்

12

பேரில் சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 10 வரையிலும் அந்தப் பதவிகள் மேலும் தொடர்ந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும், அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு 10 உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஒரு உத்தியோகத்தரையும் ஆய்சேர்ப்புச் செய்யும் நோக்கத்திற்கு, 2017 ஆகஸ்ட் 06 இல் செய்தித்தாள் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2018 செப்தெம்பர் 21 வரையிலும் ஆட்சேர்ப்புத்திட்டத்தின் 5.4 ஆம் பந்தியின் பிரகாரம் எழுத்து மூலமான போட்டிப் பரீட்சையொன்றினை நடாத்துவதன் மூலம் அத்துடன் / அல்லது நேர்முகப் பரீட்சை சபையொன்றினூடாக தொடர்புடைய உத்தியோகத்தர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தவறப்பட்டிருந்தது.

(இ) 2016 யூன் 12 இல் பிரசுரிக்கப்பட்ட செய்தித்தாள் விளம்பரமொன்றினூடாக விண்ணப்பங்களினை அழைப்பதன் மூலம் பணிப்பாளர் பதவிக்கு (மனித வளங்கள்) தெரிவுசெய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர், 2016 நவம்பர் 24 இல் குறித்த பதவியினை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்திருந்த அதேவேளை 2018 செப்தெம்பர் 21 வரை நிரந்தர அடிப்படையில் புதிய உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதற்குப்பதிலாக, பதில் அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்புச்செய்யப்பட்டிருந்தார்.

(ஈ) நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு ஒரு உத்தியோகத்தரையும் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு 41 உத்தியோகத்தர்களையும் ஆட்சேர்ப்புச்செய்யும் நோக்கத்திற்கு முறையே 2016 யூன் 12 இல் மற்றும் 2016 நவம்பர் 22 இல் செய்தித்தாள் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2018 செப்தெம்பர் 21 வரையிலும் தொடர்புடைய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 19 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிபபடையில் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(உ) அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் - 06 பதவிகள், உள்ளகக் கணக்காய்வாளர், மருந்துகள், பகுப்பாய்வாளர்,

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

செலவின உத்தியோகத்தர், மருந்தியலாளர் மற்றும் மருந்தகர் தொடர்பில் ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை தயாரிப்பதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மீளமைப்பதற்கு 2018 செப்தெம்பர் 21 வரையிலும் தவறப்பட்டிருந்தது.

(ஊ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையில் வேலைக்கமர்த்தப்பட்ட 97 உத்தியோகத்தர்களுக்கு கடமைப் பட்டியல்கள் முறைப்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகை வழிகாட்டல்களின் 4.2.2(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டம் தொடர்பில் பெறுகைக் கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கடைக்கொள்வனவு முறையின் கீழ் ரூபா 1,351,167 கூட்டுத்தொகையான 6 வகைகளினை அதிகாரசபை கொள்வனவு செய்திருந்தது. இருப்பினும், நியம விலைமனு ஆவணங்களினை அழைக்கையில் பொருத்தமான மாதிரியொன்று அரச பெறுகை வழிகாட்டலிகளின் 5.3.1 ஆம் வழிகாட்டலினால் வேண்டப்பட்டவாறு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்குறித்த பெறுகைளில் ரூபா 182,850 கிரயமுடைய வளிப்பதனாக்கியொன்று கொள்வனவுசெய்யப்பட்டிருந்த போதிலும், விலைமனுவினை அழைக்கையில் விலைமனு ஆவணங்களில் பராமரிப்பு மற்றும் சேவைகள் (maintenance and Services) தொடர்பான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால், அதிகாரசபை தொடர்புடைய கம்பனியினால் எந்த விகிதத்தில் குறித்திருந்தோ அதன் கீழ் பராமரிப்பு மற்றும் சேவைகளினைப் பெற்றிருந்தது. மேலும், கொள்வனவுசெய்யப்பட்ட வளிப்பதனாக்கி 2018 யூலை 14 வரையிலும் இருப்பில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேற்குறித்த பெறுகையில், ரூபா 670,000 கிரயமுடைய 05 மடிக் கணனிகளின் கொள்வனவு தொடர்பில் அரச பெறுகை வழிகாட்டல்களின்

14

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

8.9.1(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் முறையான உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) தேசிய போட்டி விலைமனு அழைப்பு முறையினைப் பின்பற்றுவதன் மூலம் ரூபா 13,972,626 கிரயமுடைய நகர்த்தக்கூடிய அலுமாரிகளுடனான பதிவு அறையொன்றின் திட்டமிடல், கொள்வனவு மற்றும் ஸ்தாபிப்பின் பெறுகைக்காக மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் விபரக்குறிப்புக்களினை தயாரிக்கையில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக, ரூபா 325,000 கிரயமொன்றில் நிர்மாணிக்கப்பட்ட வளைந்த படிக்கட்டுகளுக்குப் பதிலாக, ரூபா 275,000 கிரயமொன்றில் மீண்டும் மற்றுமொரு படிக்கட்டுக்களினை நிர்மாணிக்க வேண்டியிருந்தமையினால், ரூபா 325,000 செலவினம் சிக்கனமற்றதொன்றாகியது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்து கொள்ளல்

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவகமும் செயற்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபையின் வரம்பின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பில் எவ்வாறு படியெடுத்துவைக்கவேண்டும் என்பதை அதிகாரசபை அறிந்திருக்காமையினால், அது ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுபாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) வருமான கணக்கீடு | வருமானத்தை வகைப்படுத்த மற்றும் கணக்கிடக் தவறியமை |

15

**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை - 2017**

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை 2018 ஒக்தோபர் 15 திகதி அதிகார சபையின் தலைவருக்கு சமர்பிக்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1

(i) நியமத்தின் 113 ஆம் பந்தியின் பிரகாரம், சரக்கிருப்பு, குறுகிய கால முதலீடுகள், வருமான வரிக்கான ஏற்பாடு, செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி , செலுத்த வேண்டிய முத்திரை வரி, நிதி நிலைமை கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட திறைசேரி பண அனுப்புதல்கலுக்கான ஏற்பாடுகள், உள்ளடக்கப்பட்ட ஏனைய வருமானம் போன்ற உருப்படிகளுக்கான குறிப்புக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

2

(ii) நியமத்தின் 117 ஆம் பந்தியின் பிரகாரம், நிதி கூற்றுக்களை விளங்கிக் கொள்வதற்கு தேவையான குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்ற போதிலும், தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் அதிகார சபையால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20

---

நியமத்தின் 31 ஆம் பந்தியின் பிரகாரம், முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகின்ற போது மீண்டெழும் செலவுகளுக்கான அரச மானியம் பெறப்படவில்லை என்று வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்த முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடைய ஆய்வுகூட பரிசோதனை கட்டணங்கள் ரூபா 2,913,051 தொகை மற்றும் உரிமக்கட்டணம் ரூபா 217,672 தொகை என்பன மீளாய்வவாண்டிற்கான வருமானம் என கருதி கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டுடன் தொடர்புடைய மருந்துப்பொருட்களின் பதிவிலிருந்தான வருமானம் மற்றும் மருத்துவ உபகரணங்களின் செயலாக்க கட்டணங்கள் என்பன முறையே ரூபா 3,078,000 மற்றும் ரூபா 489,846 தொகைகளால் கணக்குகளில் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வவாண்டிற்கான வருமான வரி மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரிப்பொறுப்பு என்பன ரூபா 2,723,519 தொகையால் மிகைப்படுத்திக் கூறப்பட்டிருந்தன.

(ஈ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியின் பெறுமதி 106,949,434 ஆக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதி சேர் வரியின் செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 105,462,594 ஆக கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட முத்திரை கட்டணங்கள் ரூபா 31,201,280 ஆக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய முத்திரை கட்டணங்கள் ரூபா 36,111,233 கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

**2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகளுக்கும், மருத்துவ உபகரண இறக்குமதி கட்டணங்களின் வருமானம் மற்றும் நல்ல உற்பத்தி நடைமுறையின்(உள்நாடு) சோதனை கட்டணங்களுடன் தொடர்புடைய அட்டவணைகளுக்கும் இடையே முறையே ரூபா 310,800 மற்றும் 46,473 வேறுபாடுகள் காணப்பட்டன.

**2.2.4 கணக்காய்விக்கான சான்றுகள் இன்மை**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின பிரகாரம் ரூபா 85,643,656 தொகையான பெறப்பட்ட முற்பணம் தொடர்பான அட்டவணைகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகவே குறிப்பிட்ட பெறுமதியை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

**2.2.5 சொத்துக்கள் கணக்கிடப்படாமை**

அமைச்சின் கீழ் செயல்படுத்தப்பட்ட தேசிய மருந்துப்பொருள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வு கூடத்திற்கு சொந்தமான சொத்துக்கள் 2019 மே 31 வரைக்கும் கூட கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் ரூபா 288,823,697 இலாபத்தை விளைவாக தந்ததுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 57,557,675 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 231,266,022 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. 385 சதவீதத்தால் அதிகரித்த பதிவு செய்தல் வருமானம் இந்த முன்னேற்றத்தை முக்கியமாக பாதித்தது.

**3.2 பிரதான செலவு விடயங்களின் போக்குப்பகுப்பாய்வு**

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டுக்கான நிர்வாக செலவுகள் முறையே ரூபா 25,497,060 மற்றும் ரூபா 60,759,242 ஆக இருந்தன மற்றும் குறிப்பிட்ட செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளய்வாண்டில் 138 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. 2516 சதவீதத்தால் அதிகரித்த வெளிநாட்டு பிரயானச் செலவுகள் மற்றும் 1635 சதவீதத்தால் அதிகரித்த நல்ல உற்பத்தி நடைமுறையை சோதனை செய்வதற்கான செலவுகள் என்பன அதனை பிரதானமாக பாதித்திருந்தது.

# அத்தியாயம் - 4

# நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான செயல்திறன் (SDG)

தேவைகள் மற்றும் ஆர்வங்கள் ஆகியவற்றின் மூலம் உலகளாவிய தனிநபர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதை சர்வதேச வளர்ச்சி நோக்குகிறது. சுகாதாரம், கல்வி, ஜனநாயகம், நிலைத்தன்மை மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளுடன், மக்கள் அதிக வாய்ப்புகளுடன் மிகவும் சமத்துவமான வாழ்க்கையை வாழ சிறந்தவர்களாக உள்ளனர். ஐக்கிய நாடு, UNDP மூலம் , "வறுமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், கிரகத்தைப் பாதுகாப்பதற்கும், 2030 க்குள் அனைத்து மக்களும் அமைதி மற்றும் செழிப்பை அனுபவிப்பதை உறுதி செய்வதற்கு" நிலையான வளர்ச்சி இலக்குகளில் (SDG) செயல்படுகிறது. வறுமை, எய்ட்ஸ் மற்றும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடு ஆகியவை 170 க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் தீர்க்கப்படுவதை உறுதிசெய்ய நாடுகள் செயல்பட்டு வருகின்றன.
17 இலக்குகளில், இலக்கு எண். 3 என்பது "நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு" ஆகும், மக்கள் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதை உறுதிசெய்வது குழந்தை இறப்பைக் குறைக்கும் மற்றும் ஆயுட்காலம் அதிகரிக்கும், இது NMRA இன் நோக்கத்துடன் நெருக்கமாக தொடர்புடையது.

அதன்படி, NMRA இன் அனைத்து செயல்பாடுகளும் வழிகாட்டப்பட்டபடி இந்த SDG எண். 3 இன் இலக்குகளை அடைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன;

**3.8** நிதி ஆபத்து பாதுகாப்பு, தரமான அத்தியாவசிய சுகாதார சேவைகளுக்கான அணுகல் மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பான, பயனுள்ள, தரமான மற்றும் மலிவு விலையில் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளை அணுகுதல் உள்ளிட்ட உலகளாவிய சுகாதார கவரேஜை அடையுங்கள்.

**3.** அனைத்து நாடுகளிலும் புகையிலை கட்டுப்பாடு தொடர்பான உலக சுகாதார அமைப்பின் கட்டமைப்பு மாநாட்டை செயல்படுத்துவதை வலுப்படுத்துதல்.

**3.B** வளரும் நாடுகளை முதன்மையாக பாதிக்கும் தொற்று மற்றும் தொற்றாத நோய்களுக்கான தடுப்பூசிகள் மற்றும் மருந்துகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஆதரித்தல், TRIPS ஒப்பந்தம் மற்றும் பொது சுகாதாரம் குறித்த தோஹா பிரகடனத்தின்படி, மலிவு விலையில் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளுக்கான அணுகலை வழங்குதல். பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான நெகிழ்வுத்தன்மைகள் தொடர்பான அறிவுசார் சொத்து உரிமைகளின் வர்த்தகம் தொடர்பான அம்சங்களுக்கான ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகளை முழுமையாகப் பயன்படுத்த வளரும் நாடுகளின் உரிமையை உறுதிப்படுத்துகிறது, மேலும் குறிப்பாக அனைவருக்கும் மருந்துகளுக்கான அணுகலை வழங்குகிறது.

**3. C** சுகாதார நிதியுதவி மற்றும் வளரும் நாடுகளில், குறிப்பாக குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் மற்றும் சிறிய தீவு வளரும் மாநிலங்களில் சுகாதாரப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பு, மேம்பாடு, பயிற்சி மற்றும் தக்கவைத்தல் ஆகியவற்றை கணிசமாக அதிகரித்தல்.

பாதுகாப்பு, தரம், செயல்திறன் மற்றும் விலை ஆகிய அம்சங்களில் மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இந்த இலக்குகள் அனைத்தும் NMRA இன் நோக்கத்தால் தீர்க்கப்படுகின்றன.

# அத்தியாயம் - 5

# மனித வள விவரக்குறிப்பு

## 5.1 கேடர் மேலாண்மை

| | அங்கீகரிக்கப்பட்ட கேடர் | தற்போதுள்ள கேடர் | காலியிடம் |
|---|---|---|---|
| மூத்த நிலை | 34 | 12 | 22 |
| மூன்றாம் நிலை | 6 | - | 06 |
| இரண்டாம் நிலை | 155 | 74 | 81 |
| முதன்மை நிலை | 50 | 34 | 16 |
| மொத்தம் | **245** | **120** | **125** |